# True Credits Private Limited

## கணக்கு ஒருங்கிணைப்பாளர் - விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

**ஆவண எண்: TC-AATC**

## ஆவண விவரங்கள்

| குறிப்பிட்ட விவரங்கள் | விவரங்கள் |
| --- | --- |
| **தலைப்பு** | கணக்கு ஒருங்கிணைப்பாளர் - விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் |
| **பதிப்பு** | 1.0 |
| **வகைபாடு** | பொதுஜனம் |
| **விவரிப்பு** | கணக்கு ஒருங்கிணைப்பாளர் - விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் |

இந்த விதிமுறைகளும் நிபந்தனைகளும் ("T & C") பயனராகிய உங்களுக்கும், (இனி “வாடிக்கையாளர்” அல்லது “நீங்கள்” என குறிப்பிடப்படும், மேலும் “உங்கள்” போன்ற பெயர்ச்சொல் வடிவங்களும் உள்ளடக்கும்) மற்றும் பேலன்ஸ்ஹீரோ இந்தியா பிரைவேட் லிமிடெட் (இனி "பேலன்ஸ்ஹீரோ" அல்லது "நிறுவனம்" அல்லது "நாங்கள்" என குறிப்பிடப்படும்) ஆகியவற்றுக்கு இடையே சட்டப்பூர்வமான பிணைப்பு ஒப்பந்தமாகும்.

இந்த விதிமுறைகளும் நிபந்தனைகளும் இந்திய ரிசர்வ் வங்கி (“RBI”) பரிந்துரைத்த பிறகு பொருந்தக்கூடிய வழிகாட்டுதல்கள் மற்றும் அவ்வப்போது திருத்தப்பட்ட மாஸ்டர் டைரக்ஷன்- வங்கி சாரா நிதி நிறுவனம் - கணக்கு ஒருங்கிணைப்பாளர் (ரிசர்வ் வங்கி) டைரக்ஷன்ஸ், 2016-க்கு ஏற்ப, நிதிசார் தகவல் வழங்குநரிடமிருந்து (“FIP”) வாடிக்கையாளர் (“தரவு”) தொடர்பான நிதிசார் தகவல்களை மீண்டும் பெற அல்லது சேகரிக்க, நிதிசார் தகவல்கள் பயனருக்கு (“FIU”) கணக்கு ஒருங்கிணைப்பாளரால் (“AA”) வழங்கப்பட்ட சேவைகளுக்கு பொருந்தும். FIU மற்றும் AA ஆகியவற்றுக்கு இடையே நுழைவாயிலாக செயல்படுவது உட்பட பல்வேறு சேவைகளை வழங்க தொழில்நுட்ப சேவை வழங்குநரின் ஆதரவையும் FIU பெற்று வருகிறது. AA, FIU மற்றும் கூறப்பட்டுள்ள தொழில்நுட்ப சேவை வழங்குநரின் விவரங்கள் **பின்னிணைப்பு- 1** ஆக இணைக்கப்பட்டுள்ளது.

வாடிக்கையாளருக்கு பல்வேறு கடன் திட்டங்களை வழங்குவதற்காக வாடிக்கையாளரின் தரவை FIU பயன்படுத்தும் ("நோக்கம்").
இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆவணமானது, தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000 மற்றும் அதன் கீழ் நடைமுறையில் உள்ள விதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000-ஆல் அவ்வப்போது திருத்தப்பட்ட பல்வேறு சட்டங்களில் மின்னணு பதிவுகள் தொடர்பான விதிகள் போன்றவற்றை அடிப்படையாக கொண்ட ஒரு மின்னணு பதிவாகும். இந்த மின்னணு பதிவானது கணினி அமைப்பால் உருவாக்கப்படுகிறது மற்றும் நேரில் சென்று போடப்படும் எந்த கையொப்பங்களும் அல்லது டிஜிட்டல் கையொப்பங்களும் தேவையில்லை.

இணைய வளமான இணையதளம் மற்றும் True Balance மொபைல் அப்ளிகேஷன் பிளாட்ஃபார்ம் மற்றும் "True Balance" என்ற பிராண்ட் பெயரில் இயங்கும் வேறு ஏதேனும் பயன்பாடு அல்லது மென்பொருள் (இனி "True Balance" என்று குறிப்பிடப்படும்) ஆகியவற்றை அணுகுவதற்கான அல்லது பயன்படுத்துவதற்கான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை வெளியிடத் தேவைப்படும், தகவல் தொழில்நுட்ப (இடைத்தரகர்கள் வழிகாட்டுதல்கள்) விதிகள், 2011-இன் விதி 3 (1)-இன் விதிகளின்படி இந்த ஆவணம் வெளியிடப்பட்டுள்ளது.

இதனை கிளிக் செய்வதன் மூலம், இந்த விதிமுறைகள் மற்றும் பிற விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் நீங்கள் படித்து, புரிந்துகொண்டு ஏற்றுக்கொண்டீர்கள் என்பதை ஒப்புக்கொள்கிறீர்கள்.

AA மற்றும் FIU-இன் தொழில்நுட்ப சேவை வழங்குநர் மூலம் வழங்கப்படும் FIU-இன் சேவைகளை FIP மூலமாக பெறுவதற்கும், மேலே குறிப்பிட்டுள்ள நோக்கத்திற்காக அத்தகையதரவை FIU-க்கு பரிமாற்றுவதற்கான வசதியை உங்களுக்கு வழங்குவதற்கும் இதன் மூலம் நீங்கள் பேலன்ஸ்ஹீரோ மற்றும் FIU-க்கு ஒப்புதல் அளிக்கிறீர்கள்.

FIP-இலிருந்து உங்கள் தரவைப் பெறுவதற்காக AA-க்கும், மேலே குறிப்பிட்டுள்ள நோக்கத்திற்காக அத்தகைய தரவை FIU-க்கு பரிமாற்றுவதற்கு தேவையான ஒப்புதலை நீங்கள் AA-க்கு வழங்க வேண்டும்.

தற்போதைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்-இன் கீழ் AA-ஆல் பெறப்பட்ட எந்தத் தரவுகளும் பேலன்ஸ்ஹீரோவால் சேமிக்கப்படவில்லை, மேலும் அது உள்ளது உள்ளபடி AA-ஆல் FIU-க்கு பரிமாற்றப்படும்.

பின்வருபவை உள்ளிட்ட AA-ஆல் பெறப்பட்ட அனைத்து கோரிக்கைகள், ஒப்புதலின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை நீங்கள் கவனமாக படிக்க வேண்டும்:

a) கோரப்பட்ட தரவின் தன்மை மற்றும் அளவு, அத்தகைய தரவு சேகரிக்கப்படும் நோக்கம் மற்றும் FIU-க்கள் தக்கவைக்கப்படும் அதன் கால அளவு ஆகியவற்றைச் சரிபார்க்க FIP-களில் இருந்து அத்தகைய தரவை FIU-க்கு மாற்ற AA-க்கள் மூலமாக FIU-களிலிருந்து நீங்கள் பெறும் அனைத்து கோரிக்கைகளின் விவரங்களையும் நீங்கள் மதிப்பாய்வு செய்ய வேண்டும்;

b) தரவை பரிமாற்றுவதற்கான கோரிக்கையின் விவரங்களை முறையாக உறுதிசெய்த பின்னரே உங்கள் ஒப்புதலை வழங்க வேண்டும், அவ்வாறு வழங்கப்பட்ட எந்த ஒப்புதலும் உங்களைக் கட்டுப்படுத்தும்;

c) தரவை பரிமாற்றுவதற்கான கோரிக்கைகளுக்கான உங்கள் ஒப்புதலைத் திரும்பப் பெற உங்களுக்கு உரிமை உண்டு.

இந்த விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் இந்திய சட்டங்கள் நிர்வகிக்கும். விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் காரணமாக எழும் எந்தவொரு சட்ட நடவடிக்கையோ அல்லது நடைமுறைகளோ இந்தியாவில் உள்ள குருகிராம், ஹரியானாவில் உள்ள நீதிமன்றங்கள் அல்லது தீர்ப்பாயங்களில் கொண்டு வரப்பட்டு, மாற்றமுடியாத வகையில் அத்தகைய நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்களின் அதிகார வரம்பில் ஆஜர் ஆக வேண்டும் என்பதை வாடிக்கையாளர் இதன் மூலம் ஒப்புக்கொள்கிறார். இருப்பினும், நிறுவனம் அதன் தனித்த விருப்பத்தின் பேரில், வேறு ஏதேனும் நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது பிற பொருத்தமான மன்றத்தில் சட்ட நடவடிக்கை அல்லது நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் காரணமாக எழும் எந்தவொரு நடவடிக்கைகளையும் தொடங்கலாம், மேலும் இதன் மூலம் அந்த அதிகார வரம்பிற்கு வாடிக்கையாளர் ஒப்புக்கொள்கிறார்.

மேலும், ஏதேனும் கவலைகள் / குறைகள் / புகார்கள் இருக்கும் பட்சத்தில், வாடிக்கையாளர் FIU/AA இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களில் வாடிக்கையாளர் தொடர்பு கொள்ளலாம்.

**பின்னிணைப்பு 1**

**FIU மற்றும் AA-இன் விவரங்கள்**

| | |
|---|---|
| AA | ஃபின்செக் AA சொலியூஷன்ஸ் பிரைவேட் லிமிடட்<br>பதிவு அலுவலகம்: 10-2-289/71, கிருஷ்ணா டோயன் # 501, சாந்திநகர்,<br>ஹைதராபாத் 500 028, இந்தியா<br>இணையதளம்: https://www.onemoney.in |
| FIU | ட்ரூ கிரெடிட்ஸ் பிரைவேட் லிமிடெட்<br>பதிவு அலுவலகம்: 5-வது மாடி, சர்க்கிள் ஒர்க், ஹூடா சிட்டி சென்டர் மெட்ரோ ஸ்டேஷன், செக்டர் 29, குருகிராம்- 122003, ஹரியானா<br>இணையதளம்: www.truecredits.in |
| தொழில்நுட்ப சேவை வழங்குநர் | இக்னோசி சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட்<br>பதிவு அலுவலகம்: ஓபுலன்ஸ் கார்ப்பரேட் ஹவுஸ், 2-வது மாடி, அம்பிலி ரோட்,<br>அகமதாபாத் - 380015, குஜராத்<br>இணையதளம்: www.pirimidtech.com |